Registered with the Registrar of News Paper
For India under R.N.I. 11967/'67

வருட சந்தா ரூ.1/-

வருகையின் தூதன்

Those who turn the world upside down. Acts.17:6.

Vol. 68 | தேவனே, என்னைக் காப்பாற்றும், உம்மை நம்பியிருக்கிறேன் சங்.16:1 | ஜூலை 2022 No.7

மனந்திரும்புங்கள் பரலோக ராஜ்யம் சமீபித்திருக்கிறது

Repent - The kingdom of God is at hand

Henry Blackaby

இயேசு கிறிஸ்துவின் பிரசங்கத்தின் சாரம் என்ன? தேவகுமாரன் தமது பிதாவின் இருதயத்திலிருந்து வெளிப்படுத்திய முதல் செய்தி எது? 'மனந்திரும்புங்கள்' மத்.4:17 என்பதாகும்.

ஆண்டவராகிய இயேசு இவ்வுலகில் வந்தபோது தமது ஜனத்துக்கு இந்த விசேஷ செய்தியை வைத்திருந்தார். இன்று உலகத்தைச் சுற்றி வந்து கொண்டிருக்கும்போது நான் பார்க்கும் காட்சி பயங்கரமானது. அது தேவ ஜனம் பாவத்தில் மூழ்கியிருப்பதாகும். அவர்களுக்கு மனந்திரும்புதலைக் குறித்துப் பிரசங்கிப்பதில் அதிக உதாசீனம் காணப்படுகிறது. மனந்திரும்புதலில்லாமலே மக்கள் எழுப்புதலுக்காகக் கதறுகிறார்கள். தேவன் இதை ஆதரிக்கவில்லை. அவர் சொல்வது என்ன?"இதோ இரட்சிக்கக் கூடாதபடிக்கு கர்த்தருடைய கை குறுகிப் போகவுமில்லை, கேட்கக்கூடாதபடிக்கு அவருடைய செவி மந்தமாகவுமில்லை; உங்கள் அக்கிரமங்களே உங்களுக்கும் உங்கள் தேவனுக்கும் நடுவாகப் பிரிவினை உண்டாக்குகிறது, உங்கள் பாவங்களே அவர் உங்களுக்குச் செவி கொடாதபடிக்கு அவருடைய முகத்தை உங்களுக்கு மறைக்கிறது" ஏசாயா 59:1-2. ஒவ்வொரு ஊழியக்காரனும் ஜனங்களிடம் பாவத்தைக் குறித்துக் கண்டிக்க வேண்டும்.

சிலர் மனந்திரும்புதலுக்குப் பதிலாக எழுப்புதலுக்காக ஜெபித்தால் போதும் என்று எண்ணுகிறார்கள். ஆனால் அப்படி ஜெபிப்பதால் தேவன் சந்தோஷப்படுவதில்லை. அவரது வல்லமை நம்மில் செயல்படுவதுமில்லை. மாறாக அவர் சொல்லுவதென்ன? நான் உங்களோடுதானிருக்கிறேன். என் வல்லமையை நான் பரலோகத்தில் விட்டுவரவில்லை. எனவே பிரச்சனை உங்களிடமே இருக்கிறது. என் பிரசன்னத்தை உங்களால் உணர்ந்துகொள்ள முடியவில்லை. நீங்கள் எனக்குக் கீழ்ப்படியவில்லை. சபையின் தலையாகிய கிறிஸ்து இயேசுவிடமே தேவனுடைய சகல வல்லமையும், சகல பரிபூரணமும் அடங்கியிருக்கின்றன. அவர் தேவகுமாரன், நாமோ அவரை ஏற்றுக் கொள்ள வில்லை.

மனந்திரும்புங்கள் என்பது நேர் மறையான வாக்கு. அது எதிர்மறையான வாக்கு அல்ல. அது தேவனுடைய இருதயத்திலிருந்து எழும்புகிறது. அதோடு தொடர்ந்து சொல்லப்படுவது 'பரலோக இராஜ்யம் சமீபித்திருக்கிறது' என்பதாகும். இன்னொரு விதமாகக் கூறினால் 'தேவனுடைய முழு ராஜ்யமும் உங்களுக்கு மிக அருகாமையில் உங்கள் வாழ்வில் வெளிப்படும் படியாக காத்துக் கொண்டிருக்கிறது' என்பதாகும்.

உத்தம மனந்திரும்புதல் என்பது நாம் தவறான பாதையில் சென்று கொண்டிருக்கிறோம் என்ற விழிப்புணர்வாகும். உங்கள் வாழ்வில் ஏன் வல்லமையில்லை? நீங்கள் தவறான பாதையில் இருக்கிறீர்கள். நீங்கள் கிறிஸ்துவோடு நடந்து கொண்டிருந்தால் தேவ வல்லமையை அனுபவிக்காமலிருக்கக் கூடாது என்பது ஆவிக்குரிய சத்தியம்.

சீஷர்கள் இயேசுவால் அழைக்கப் பட்டபோது, அவர்கள் தாங்கள் செய்த தொழிலை விட்டுவிட்டு அவரைப் பின்பற்றினார்கள். பேதுரு தன் படகுகளுடனும், வலைகளுடனும் தங்கியிருந்திருந்தால் தேவ வல்லமையைப் பெற்றிருக்கக்கூடுமா? இயேசுவைப் பின்பற்றினபடியால் மாத்திரமே அவன் வல்லமையான சாட்சியாக மாற முடிந்தது. நாமோ சுயநலத்தோடு நாம் விரும்பும் பாதையில் நடந்து கொண்டு, தேவனை நம்மிடம் அழைக்கிறோம். எனவே அவருடைய வல்லமையையும், பிரசன்னத்தையும் அவற்றின் உத்தமத்தையும் பிறர் நம்மில் காணத்தக்கதாக நாம் செயல்பட முடியவில்லை.

வேதவாக்கியங்களைப் புரிந்து கொள்ளுதல்

ஆண்டவராகிய இயேசு தமது சீஷர்களுக்குத் தமது கடைசி போதனையின் போது "வேதவாக்கியங்களை அறிந்து கொள்ளும்படி அவர்களுடைய மனதை அவர் திறந்தார்" என்று லூக்.24:45-ல் படிக்கிறோம். தேவ வசனத்திற்கு அதிக முக்கியத்துவம் கொடுத்து அதிக நேரம் அதைப் படிப்பதின் மூலம் தேவன் உங்கள் இருதயத்தைத் திறந்து, அதின் மூலம் தேவனை முகமுகமாய் தரிசிக்கிறீர்களா? அவர் தமது வார்த்தைகள் மூலம் தம்மை வெளிப்படுத்துவதை அறிந்து கொள்ளுகிறீர்களா? வேதவாக்கியங்கள் உங்கள் மனதையும் இருதயத்தையும் தொடும் படி அனுமதிக்கிறீர்களா?

தேவஜனங்கள் பிதாவின் பணியை உலக முழுவதும் நிறைவேற்ற அவர்களை ஆயத்தப்படுத்த தாம் செய்ய வேண்டிய இறுதிப்பணி, அவர்கள் வேத வாக்கியங்களைப் புரிந்து கொள்ளும் படி செய்வதே என்பதை ஆண்டவர் அறிந்திருந்தார். தேவன் அவர்களுக்கு வெளிப்படுத்துகிறபடியே அவர்களும் தேவனுடைய செயல்பாடுகளையும் நோக்கத்தையும் பார்க்க வேண்டும். ஆனால் இன்று சுவிசேஷப் பணி செய்கிறவர்கள் பெரும்பாலும் தங்கள் மனதும் மூளையும் நடத்துகிறபடி செயல்படுவதேயன்றி வேதவாக்கியங்களின் அடிப்படையில் செயல்படுவ தில்லை. உலகம் நமது சிறந்த சிந்தனைகளையல்ல, தேவன் வெளிப்படுத்தும் சிந்தனைகளையே எதிர்பார்க்கிறது.

தொடர்ந்து, "எழுதியிருக்கிறபடி கிறிஸ்து பாடுபடவும் மூன்றாம் நாளில் மரித்தோரிலிருந்து எழுந்திருக்கவும் வேண்டியதாயிருந்தது" லூக்.24:45-46 என்று வாசிக்கிறோம். இதைக் குறித்து பவுல், கிறிஸ்துவுடனே கூடச் சிலுவையில் அறையப்பட்டேன் கலா.2:20 என்று கூறுகிறார். கிறிஸ்து எனக்காகச் சிலுவையிலறையப்பட்டார் என்று அவர் கூறாமல் தாமும் கிறிஸ்துவுடனே கூடச் சிலுவையில் அறையப்பட்டதாகக் கூறுகிறார். ஆயினும் தான் பிழைத்திருப்பதாகக் கூறுகிறார். ஏனெனில் கிறிஸ்துவும் மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுந்தார். நாமும் பாவத்திற்கு மரித்து கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலை அனுபவிக்க வேண்டும். பாவத்தின் விளைவுகளின்மேல் வல்லமையை தேவன் தமது குமாரனுடைய சிலுவை மூலமாகத் தருகிறார். கிறிஸ்து மரித்தோரிலிருந்து எழுந்தபடியால் விசுவாசிக்கிற அனைவருக்கும் இந்த வல்லமை அளிக்கப்படுகிறது எபேசி.1:18, 21. இந்த வல்லமையை அனுபவிக்கிறீர்களா?

(3-ம் பக்கம் பார்க்க)

வாசகர் கவனத்திற்கு

2017-ம் ஆண்டு முதல் இந்நாள் வரைக்கும் நாங்கள் யாருக்கும் பத்திரிகை அனுப்புவதை நிறுத்த வில்லை. உங்களுக்கு பத்திரிகை வரத்தவறினால் தயவாய் எங்களுக்கு தெரிவியுங்கள்.

விபரங்களுக்கு

மொபைல் : ***9543221008***

வாட்ஸ்அப் : ***9489740295***

வருகையின் தூதன்

ஆசிரியர்:
வெஸ்லி தேவதாசன்
(Former Editor : S.Devadason 1955 - 1999)

Advisory Board : D. StanlyJones, S. Thomas Ganesh, Christy Samuel, Christinal P.Mony

வருகையின் தூதன் ஊழியத்தை தினந்தோறும் உங்கள் ஜெபத்தினாலும், மாதந்தோறும் உங்கள் காணிக்கையினாலும் தாங்குங்கள்.

மாதந்தோறும் தபாலில்/வங்கியில் அனுப்ப இயலாதவர்கள் வருடத்திற்கு ஒரு முறை குறைந்தபட்சம் ரூபாய் 500 அனுப்புங்கள்.

உபவாச ஜெபம் சிறப்பிதழ்

கிறிஸ்துவுக்குள் மிகவும் பிரியமானவர்களே

பிதாவாகிய தேவனாலும், நம்முடைய இரட்சக ராயிருக்கிற கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினாலும் கிருபையும் இரக்கமும் சமாதானமும் உண்டாவதாக.

2022 ஜூலை மாத பத்திரிகைக்காக என் தேவனை 'வெகு மனத்தாழ்மையோடும், மிகுந்த கண்ணீரோடும்' துதிக்கிறேன் அப்.20:19. தேவனுடைய பிள்ளைகளாகிய நீங்கள் அனுப்பிய எல்லா ஜெப வேண்டுகோள்களுக்காகவும் என்னால் இயன்றவரை ஜெபித்தேன். நீங்கள் மாதந்தோறும் அனுப்பிய காணிக்கைகளுக்காகவும், சில தேவனுடைய பிள்ளைகள் அனுப்பிய சிறப்பு காணிக்கைகளுக்காகவும் கர்த்தரை ஸ்தோத்தரிக்கிறேன். ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் உங்களுக்கு எங்கள் நன்றியை தெரிவிக்கிறேன்.

உலக பிரசித்திப்பெற்ற ஊழியக்காரராகிய லியோனார்டு ரேவன்ஹில் (Leonard Ravenhill) என்பவர் எழுதிய "**எழுப்புதல் தாமதிப்பது ஏன்**" என்ற புத்தகத்தில் 38-ம் பக்கம் இவ்வாறு அச்சிடப்பட்டிருக்கிறது :

"தம் ஜனம் ஜெபிக்கும் போதுதான் தேவனுக்கு அதிகப் பொறுமை தேவையாயிருக்கிறது. அவர் என்ன செய்ய வேண்டும், எப்படிச் செய்ய வேண்டுமென்று நாம் அவருக்குச் சொல்லுகிறோம். நியாயந்தீர்த்தலும் பாராட்டு தலும் ஜெபத்தில்தான். சுருங்கக் கூறின் ஜெபிக்கிறோம் என்று சொல்லும்போது ஜெபிப்பதைத் தவிர மற்றெல்லாவற் றையும் நாம் செய்கிறோம். வேதாகமப் பள்ளி எதுவும் இக்கலையை நமக்குக் கற்றுத்தர இயலாது. தனது பாடப் பயிற்சித் திட்டத்தில் ஜெபத்திற்கு என்று ஒரு தனிப்பகுதி அளித்துள்ள வேத கலாசாலை ஏது? நாம் கற்றுக் கொள்ள வேண்டிய மிக முக்கியமானது வேதத்தில் ஜெபத்தைப் பற்றி எழுதப்பட்டிருப்பதே. ஆனால் இது எங்கே கற்பிக்கப் படுகிறது? கடைசிக் குட்டையும் நாம் உடைத்துவிட்டு, நம்முடைய தலைவர்களிலும் ஆசிரியர்களிலும் பலர் ஜெபிப்பதில்லை, கண்ணீர் சிந்துவதில்லையென்று உரக்கக் கூறுவோம். தாங்களே அறியாததை அவர்கள் கற்பிக்க முடியுமா?"

இதனை வாசித்த தூதன் வாசகரில் ஒருவர் தபால் அட்டையில் எனக்கு ஒரு கடிதம் எழுதியிருந்தார். அதன் சுருக்கம் :

ஜெபத்தைப் பற்றிய உங்கள் கட்டுரை காலம் கடந்தது. இப்பொழுது நமது தலைவர்கள் அதிகமாக ஜெபிக்கிறார்கள். தலைவர்களை மதிக்க கற்றுக்கொள்வோம்.

*****

இம்மாதம் 'உபவாச ஜெபம்' பற்றி சில குறிப்புகளை தேவ ஒத்தாசையோடு எழுதுகிறேன்.

1. நாம் ஏன் உபவாசிக்க வேண்டும்?

"ஆதலால் நீங்கள் இப்பொழுதே உபவாசத்தோடும் அழுகையோடும் புலம்பலோடும் உங்கள் முழு இருதயத் தோடும் என்னிடத்தில் திரும்புங்கள் என்று **கர்த்தர் சொல்லு கிறார்**" யோவேல் 2:12.

2. எப்படி உபவாசிக்க வேண்டும்?

"நீங்கள் உங்கள் வஸ்திரங்களையல்ல, உங்கள் **இருதயங்களைக் கிழித்து,** உங்கள் தேவனாகிய கர்த்தர் இடத்தில் திரும்புங்கள்." யோவேல் 2:13.

3. யார் யார் எல்லாம் உபவாசிக்க வேண்டும்?

1. முதியோரைச் சேருங்கள்
2. பிள்ளைகளையும் பாலுண்கிற குழந்தைகளையும் கூட்டுங்கள்.
3. மணவாளன் தன் அறையையும், மணவாட்டி தன் மறைவையும் விட்டு புறப்படுவார்களாக யோவேல் 2:16

4. கர்த்தருடைய ஊழியக்காரர் என்ன செய்ய வேண்டும்?

கர்த்தரின் பணிவிடைக்காரராகிய ஆசாரியர்கள் மண்டபத்துக்கும் பலிபீடத்துக்கும் நடுவே அழவேண்டும் யோவேல் 2:17.

5. எதற்காக உபவாசிக்க வேண்டும், எதற்காக அழ வேண்டும்?

அப்பொழுது கர்த்தர் தமது **தேசத்துக்காக** வைராக்கியங் கொண்டு, தமது ஜனத்தைக் கடாட்சிப்பார் யோவேல் 2:18.

இதற்காகவே "**எழுப்புதலுக்காக இதய கதறல்**" 7 மணி நேர உபவாச ஜெபம் நடத்தப்படுகிறது. 2016-ம் ஆண்டு மாதந்தோறும் உபவாச ஜெபங்களை நடத்த கர்த்தர் சொன்னதினால் 2016 முதல் 2020 வரை ஆங்காங்கே உள்ள 45 சபைகளில் உபவாச ஜெபங்களை நடத்த தேவன் இரக்கம் பாராட்டினார். இவற்றில் வெளிமாநிலங்களான பாண்டிச் சேரி, கர்நாடகா, பாம்பே, டெல்கி ஆகிய இடங்களும் அடங்கும்.

2022 ஜூன் மாதம் வரைக்கும் கீழ்காணும் இடங்களில் தேவனுடைய இரக்கத்தால் நடத்தியுள்ளோம்.

மார்ச் – St. Mathiya Church, Meerankulam

ஏப்ரல் – Shekinah Full Gospel Church, Pasuvandanai

மே – A.G. Church, Martandam

ஜூன் – Immanuel Pentecoastal Church, Dharmapuri

(8-ம் பக்கம் பார்க்க)

அறிவிப்புகள்

நீங்கள் கடிதம், காணிக்கை அனுப்பும் ஒவ்வொரு தடவையும் தயவுசெய்து உங்கள் **பத்திரிகை பதிவு எண்**, உங்கள் **தொலைபேசி எண்** இரண்டையும் கட்டாயம் எழுதுங்கள்.

வங்கி வழியாக காணிக்கை அனுப்புவோர்
தயவாய் உடனே எங்களுக்கு தெரிவியுங்கள்
SMS அனுப்ப : **9489740295, 95432 21008**
e-mail:varukayinthoothan@hotmail.com

கடிதம், மணியாடர், கொரியர் அனுப்ப வேண்டிய முகவரி:

வருகையின் தூதன்
நியுபோர்ட் தெரு,
நாகர்கோவில் – 629 001.
Ph. : 95432 21008

VARUKAYIN THOOTHAN
Newport Street,
Nagercoil-629 001.
Ph. : 95432 21008

காசோலை *(Cheque & Draft)*
வெஸ்லி தேவதாசன் (WESLEY DEVADASON)
என்ற பெயர் மட்டும் எழுதி அனுப்புங்கள்

பத்திரிகை பணி
A/c. Name : **WESLEY DEVADASON,** A/c. No. : **2131010118439**
Punjab National Bank, Nagercoil -1. IFSC Code : **PUNB0213120**

வருகையின் தூதன் உபவாச ஊழியம்
A/c. Name : **WESLEY DEVADASON,** A/c. No. : **370601000002557**
I.O.B., Nagercoil-1 IFSC Code : **IOBA0000063**

முன்னேற்றப்பணி
A/c. Name : **WESLEY DEVADASON,** A/c. No. : **61822200136904**
Canara Bank, Ngl-1 IFSC Code : **CNRB0001110**

(1-ம் பக்க தொடர்ச்சி)

இன்று மக்கள் ஆசீர்வாதத்தின் செய்திகளை மட்டுமே கேட்க விரும்பு கிறார்கள். பாவத்தைக் குறித்துக் கண்டித் தால் கோபமடைவார்கள். ஆனால் தேவனுடைய ராஜ்யத்தைப் பெற்றுக் கொள்ள முதலாவது செய்ய வேண்டியது மனந்திரும்புதல். நமது வாழ்வு தேவனு டைய வாழ்வுக்கு ஏற்றதாக அமைய வேண்டும். அதற்காக நாம் நமது பாவங்களை விலக்கும்படி தேவன் நம்மோடு இடைபட்டுக் கொண்டிருக் கிறார். அதற்காகவே அவர் தமது ஒரே பேறான குமாரனை சிலுவை மரணத் துக்கு ஒப்புக்கொடுத்தார்.

மனந்திரும்புதலும் எழுப்புதலும்

தேவஜனங்கள் தாங்கள் போகும் பாதையை விட்டுவிட்டு மனந்திரும்பி தேவன் விரும்பும் பாதையில் அவரோடு நடக்க விரும்பும்போது, தேவனுடைய நிறைவு அவர்களில் ஏற்படுவதே எழுப்புதல். நீங்கள் தேவனோடு நல் மனம் பொருந்தும்போது அவரது அளவில்லாத பிரசன்னத்தையும் வல்ல மையையும் பெறமுடியும். இவ்வாறு அவர் உங்களில் வல்லமையோடு வர முதலாவது உங்களைக் கழுகி சுத்தப் படுத்தி பரிசுத்தப்படுத்தும்படி அவரிடம் கேளுங்கள். உங்கள் மூலம் வல்லமை வெளிப்படாவிட்டால் நீங்கள் எதிலிருந்தோ விடுதலை பண்ணப்பட வேண்டியதா யிருக்கிறது. அதைஅவரிடம் கேளுங்கள்.

மனந்திரும்புதல் என்பது 'தேவனே நான் நிர்விசாரமானவனாகக் காணப்படக்கூடாது. உம்மோடு நான் நடப்பதில் உமது பிரசன்னத்தையும் வல்லமையையும் வெளிப்படுத்தாமல் நான் திருப்தியாயிருக்கக்கூடாது. நீர் என்னில் கிரியை செய்வதற்குத் தடையா யிருப்பது எதுவாயினும் அதை எனக்குக் காண்பியும். உடனே அதிலிருந்து என்னை விலக்கிக் கொள்ளுவேன்' என்று கூறுவதாகும்.

நம்மில் அனேகர் நம்மை முழுவதுமாக தேவனுக்கு அர்ப்பணிப்ப தில்லை. அர்ப்பணிக்கும் விருப்பமு மில்லை. "ஆண்டவரே, எனக்குள்ள யாவற்றையும், என்னையும் உமக்கு ஒப்படைக்கிறேன்" என்ற எளிய ஜெபத்தை நாம் ஏறெடுப்போமாக.

கிறிஸ்து நம்மிலிருப்பதே மகிமையின் நம்பிக்கை

Christ in us, the hope of glory

Rich Carmicheal

இச்செய்தி, நாம் ஆவிக்குரிய வாழ்விலும் கனிகொடுப்பதிலும் நிரம்பி வழிவதை ஆண்டவர் விரும்புகிறார் என்பதை உற்சாகத்துடனும் வல்லமை யுடனும் நமக்கு நினைப்பூட்டுகிறது. மேலும் நாம் நம்மைச் சோதித்து அறியவும், தேவனுடைய நிறைவைப் பெற்று ஊழியத்திலும் வாழ்விலும் தடையாயிருப்பவற்றை ஆராய்ந்து மனந்திரும்பவும் இது ஏதுவாயிருக்கிறது.

நாம் மனந்திரும்பி, கிறிஸ்துவின் அடிச்சுவடுகளில் நடந்தால் தேவனு டைய உன்னத வாழ்வையும் அவரு டைய பிரசன்னத்தையும், வல்லமை யையும், சமாதானத்தையும், சந்தோஷத் தையும், அன்பையும் மேலும் மேலும் பெறலாம்.

ஜீவ தண்ணீருள்ள நதிகள்

நம் ஒவ்வொருவருடைய இருத யங்களிலுமிருந்து ஜீவதண்ணீருள்ள நதிகள் புறப்படுவதை தேவன் வாஞ்சிக் கிறார். அவரது ஆவியின் வாழ்வு, ஆவியின் கனி இவற்றால் நாம் நிரம்பு வதும், அவருடைய குமாரனுடைய சாயலை நாம் பெறுவதும் அவரது சித்தம். நாம் அவரது வசனத்தால் நிரப்பப் படவும், மற்றவர்களோடு தைரியமாக அதனைப் பகிர்ந்து கொள்ளவும் அவர் எதிர்பார்க்கிறார். நாம் அவரில் உறுதி யாயிருந்து அவரது சத்துவத்தில் பலப் படவும் (எபேசி.6:10) அவரது பலத்தால் சேவை செய்யவும், நற்கிரியை செய்ய வலிமை பெறவும், சோதனைகளை மேற்கொள்ளவும் தெய்வீக வாழ்வு வாழவும் அவர் விரும்புகிறார்.

அன்பில் நாம் வேரூன்றி நிலை பெறுவது (எபேசி.3:17) அவரது வாஞ்சை. மேலும் நமது அன்பு பெருகவும், நிலைத் தோங்கவும் 1தெச. 3:12 கிறிஸ்துவின் அன்பை அதன் எல்லாத் திசைகளிலும் அறிந்து கொள்ளவும் அவர் விரும்பு கிறார். இந்த அன்பு அறிவுக் கெட்டாதது (எபேசி.5:2,3; 3:18,19).

நாம் மகிழ்ச்சி நிறைந்தவர்களா யிருப்பது அவருக்குப் பிரியம். இந்த மகிழ்ச்சியால் நாம் ஆர்ப்பரித்துப் பாட வேண்டும் சங்.65:13. இந்த மகிழ்ச்சி அளவற்றதாகவும், நித்தியமானதாகவும், விவரிக்க முடியாத மகிமை நிறைந்ததுமா யிருக்கும் சங்.43:4; ஏசா.35:10; 1 பேது.1:8.

நாம் சமாதானம் நிறைந்தவர் களாய் வாழவும், நமது இருதயங்கள் கலங்காமலும் பயப்படாமலும் இருக்க வும் யோவா.14:27 எல்லாப் புத்திக்கும் மேலான சமாதானம் பிலிப்.4:7 நம்மை ஆட்கொள்ளவும் அவர் விரும்புகிறார்.

நம்மில் கிறிஸ்து

நாம் நொறுங்கிய ஒரு உலகத்தில் சோதனைகளையும் வேதனைகளையும் சந்தித்துக் கொண்டிருக்கும் போது நல்லதோர் வாழ்வு வாழ்வதெப்படி என்ற கேள்விக்குறியுடனிருக்கிறோம். ஆனால் கிறிஸ்து நம்மிலிருந்தால் நிறை வான ஆவிக்குரிய வாழ்வும், கனிதரும் அனுபவமும் கூடுமானவைகளே. நாம் கிறிஸ்துவிலும், கிறிஸ்து நம்மிலும் வாழ்ந்தால் நாம் அவரது வாழ்வால் நிரம்பி, அவரது மகிமைக்காக ஏராளமான கனிகளைக் கொடுப்போம் யோ.15:4-8. அவராலன்றி நம்மால் ஒன்றும் செய்யக் கூடாது வச.5.

ஆஸ்வால்டு சேம்பர்ஸ் என்பவர், தனது அனுதின தியானக் குறிப்பேடு ஒன்றில், "நான் இயேசுவிடம் வந்தால் போதும், எனது உண்மையான வாழ்வு, எனது உண்மையான ஆசைகளுடன் ஒத்துச்செல்லும். நான் பாவத்திலிருந்து விடுபட்டுவிடுவேன். கர்த்தருடைய பாடல் எனது வாழ்வில் ஆரம்பமாகும். இயேசுவோடுள்ள தனிப்பட்ட உறவு எல்லாவற்றையும் மாற்றக்கூடியது" என்று எழுதியிருக்கிறார்.

ஹென்றி பினாக்கபியும் இதனை ஆதரித்துக் கூறுகிறார். ஆண்ட்ரூ முர்ரே "இயேசு கிறிஸ்து தமது பரிசுத்தம், வல்லமை, தெய்வீக வாழ்வு எல்லா வற்றையும் பரத்தில் நம்மோடு பகிர்ந்து கொள்ளுகிறார். நாம் அவரோடு பரத்தில் வாழுகிறோம். அவர் நம்மில் பரலோகத் தோடு வாழுகிறார். அவரோடு நம் இருதயங்களில் பரலோக ராஜ்யம் இருக்கிறது. அதில் பரத்தில் செய்யப் படுவது போல் அவர் சித்தம் செய்யப் படுகிறது. நாம் இதை நிச்சயமாக நம்ப வேண்டும்" என்று குறிப்பிடுகிறார்.

நாம் விசுவாசிகளானால் கிறிஸ்து நம்மில் வாழுகிறார் என்பது நமது எளிய ஆனால் மிகப்பெரிய விசுவாசம். 'கிறிஸ்து வுடனே கூடச் சிலுவையில் அறையப் பட்டேன்; ஆயினும் பிழைத்திருக்கி றேன், இனி நானல்ல, கிறிஸ்துவே எனக்குள் பிழைத்திருக்கிறார்' கலா.2:20. நாம் வழிந்தோடும் வல்லமையால் நிரப்பப்பட வேண்டியது அவசியம். தேவன் சர்வ வல்லவர், அவரது உயிர்த் தெழுதலின் வல்லமை நம்மில் பலத்த கிரியைகளை நடப்பிக்கக் கூடியது எபேசி.1:19; 3:20; கொலோ.1:29. நாம் அவரது அன்பில் நிரம்பி வழிய வேண்டும். ஏனெனில் அவர் அன்பாயிருக்கிறார் 1 யோவா.4:8. அவர் தமது அன்பை நமது உள்ளங்களில் தமது ஆவியால் ஊற்று கிறார் ரோமர் 5:5. நாம் மகிழ்ச்சியில் பொங்கி வழிய வேண்டும். மகிழ்ச்சியின் நிறைவு அவரது சமூகத்திலிருந்து வருகிறது சங்.16:11. ஆழமும் நிலைவரமு மான சமாதானத்தையும் அவரிடம் பெறலாம். ஏனென்றால் அவர் எப் போதும் எவ்விதத்திலும் சமாதானத்தை அருளுகிறவர் 1 தெச.3:16. நாம் பரிசுத்த மான தெய்வீக வாழ்வு வாழ முடியும். ஏனென்றால் அவர் ஒருவரே நம்மை சுத்திகரிப்பவர் எபி.2:11. மேலும் அவரே 1 கொரி.1:30-ன் படி தேவனால் நமக்கு ஞானமும், நீதியும், பரிசுத்தமும், மீட்பு மானார். சுருங்கக்கூறினால் அவரே நமது ஜீவன் கொலோ.3:4.

மனந்திரும்புதலும் எழுப்புதலும்

மேற்கூறப்பட்ட சத்தியங்கள் மனந்திரும்புதலின் முக்கியத்துவத்தைக் காண்பிக்கின்றன. நமது பாவங்களால் இத்தகைய நிறைவாழ்வையும் கனி தருவதையும் இழந்துவிடுவது எத்தனை பரிதாபம்! அவர் தமது அன்பாலும் கரிசனையாலும், தயவு, பொறுமை, நீடிய சாந்தம் இவைகளின் ஐசுவரியத் தாலும் ரோமர் 2:4. நம்மை மனந்திரும்பு தலுக்கு அழைக்கிறார். அவர் வார்த்தை யின்படி "நான் நேசிக்கிறவர்கள் எவர்

(4-ம் பக்கம் பார்க்க)

(3-ம் பக்க தொடர்ச்சி)

களோ அவர்களைக் கடிந்து கொண்டு சிட்சிக்கிறேன்" வெளி.3:9 என்கிறார். மனந்திரும்புதல் இரட்சிப்புக்கும், இளைப் பாறுதலுக்கும் வழிநடத்தும். இவை கர்த்தருடைய சமூகத்திலிருந்து பெறப் படுபவை(2கொரி.7:10; அப்.11:18; 3:19).

மனந்திரும்பி, எழுப்புதலுக் காகக் கர்த்தரைத் தேடும் காலம் இது. பாவமும், வெதுவெதுப்பான நிலையும் வேண்டாம். ஆண்டவருக்கு நேராக திரும்பி, அவருக்கு முற்றிலுமாக நம்மை அர்ப்பணிப்போம். அவர் நம் மூலமாகத் தமது நாமத்தை மகிமைப்படுத்துவாராக. நம் மூலமாக உலகம் ஜீவன், அன்பு, வல்லமை, நீதி, சமாதானம், சந்தோஷம் ஆகியவற்றைப் பெற்றுக்கொள்ளட்டும். அவர் பெருகவும் நாம் சிறுகவும் வேண்டும் யோவா.3:30. கிறிஸ்து நம்மி லிருப்பது மகிமையின் நம்பிக்கை கொலோ.13:27.

ஒரு சிறுகூட்டம் மக்கள் தேவன் இறங்கி வரும்படி உத்தமமாகவும், விடாப்பிடியாகவும் அவர் இறங்கி வரும் வரை ஜெபித்தால், எந்த சபையிலும்,சிற்றாலயத்திலும் ஊழிய கூடுகை யிலும் எழுப்புதல் ஏற்படாமலிருப்பதில்லை.

ஆவியானவர் புதுவாழ்வைக் கொண்டு வருகிறார்

The Spirit brings forth new life

Horatius Bonar (1808-1889)

தேவன் நம்மைப் புதிய வாழ்வுக்கு அழைக்கிறார் என்பது வாழ்வின் ஒரு புதிய படியோ, புதிய பழக்கவழக்கமோ அல்ல, அது ஒரு புத்தம் புதிய வாழ்வு. இவ்விதமான வாழ்வினை அளிக்க துய ஆவியானவர் வல்லமை யுடன் இறங்கி வந்து மனித ஆத்துமாக் களுக்குள் புகுந்து பழையதை வெளி யாக்கி அங்கே வாழ்வதால் புதுவாழ்வை அளிக்கிறார்.

கிறிஸ்தவம் என்பது கிறிஸ்து வோடு சிலுவையில் அறையப்பட்டு அவரோடு அடக்கம் பண்ணப்பட்டு, அவரோடு உயிர்த்தெழுந்து, பரத்துக் கேறி, அவரோடு உன்னதங்களில் வீற்றி ருக்கும் அனுபவமாகும். ரோமர் 6:3-8; கலா.2:20; எபேசி.2:5, 6; கொலோ.3:1-3. இந்நிலையில் நாம் பாவத்துக்கு மரித்தும் பின்பு தேவனோடு பிழைத்திருப்ப தாகவும் ரோமர் 6:11-ல் குறிப்பிடுகிறார். அவர் தமது அவயவங்களை அநீதியின் ஆயுதங்களாகப் பாவத்துக்கு அல்ல, தம்மை தேவனுக்கு ஒப்புக்கொடுத்து, தமது அவயவங்களை நீதியின் ஆயுதங் களாக தேவனுக்காக ஒப்புக்கொடுத்தார். 'மேலானவைகளையே நாடுங்கள்' என்று கூறுகிற அவர், "அசுத்தம், மோகம், துர்இச்சை, விக்கிரகாராதனையான பொருளாசை ஆகிய இவைகளைப் பூமியில் உண்டு பண்ணுகிற உங்களது அவயவங்களை அழித்துப் போடுங்கள்" கொலோ.3:1-5 என்கிறார்.

புதுமை என்பது தீமை அகற்றப் படுவதையும், நன்மை உள்ளடக்கப்படு வதையும் கொண்டது. இதைக் குறித்து பவுல் நீதி, பரிசுத்தம் என்ற இரு பண்புகளைக் குறிப்பிடுகிறார். அதன்படி களைந்து போட வேண்டிய "முந்தின நடக்கைக்குரிய மோசம் போக்கும் இச்சைகளாலே கெட்டுப்போகிற பழைய மனுஷனைக் களைந்து போட வேண்டும். அதோடு உள்ளத்திலே புதிதான ஆவியுள்ளவர்களாகி, மெய் யான நீதியிலும், பரிசுத்தத்திலும் தேவனுடைய சாயலாக சிருஷ்டிக்கப் பட்ட புதிய மனுஷனை தரித்துக் கொள்ளுங்கள்" எபேசி.4:22-24.

எனவே நாம் அழைக்கப்பட் டுள்ளது, புதிய சந்தோஷம், புதிய பணி, புதிய நம்பிக்கை ஆகியவைகளினாலான புது வாழ்வாகும். அது தேவகுமாரனு டைய சாயலுக்கொப்பானது. அவர் ரோமர் 8:29-ன்படி அனேக சகோதரர் களுக்குள்ளே முதற்பேறானவர். "தமக்கு முன்பாக நாம் அன்பில் பரிசுத்தமுள்ளவர் களும் குற்றமில்லாதவர்களுமாயிருப் பதற்கு, அவர் உலகத் தோற்றத்துக்கு முன்னே கிறிஸ்துவுக்குள் நம்மைத் தெரிந்துகொண்டார்" எபேசி.1:4.

பரிசுத்தத்திற்கு அழைப்பு

தேவன் நம்மைப் பரிசுத்தத்திற்கு அழைக்கிறார் 1 தெச.4:7. அப்போது பரிசுத்தமாகுதலின் பலன் பெற்றுக் கொள்ளப்படுகிறது ரோமர் 6:22. அதனால் நமது இருதயங்கள் திருப்தி யடையும். 1 தெச.3:13-ன் படி நாம் பிழையற்றவர்களாகவும், பரிசுத்தமுள்ள வர்களாகவும் இருக்க முடியும். நாம் 'பரிசுத்த நடக்கையும் தேவ பக்தியு முள்ளவர்களாயிருக்க வேண்டும்' 1 பேது.3:11. அப்போது நாம் பரிசுத்த ஆசாரியக்கூட்டம் 1 பேது.2:5. எல்லா நடக்கையிலும் பரிசுத்தம் 1 பேது.1:5, பரிசுத்த அழைப்பினாலே அழைத்த அழைப்பு 2 தீமோ.1:9 பரிசுத்தமுள்ள வர்களும் குற்றமில்லாதவர்களுமாயிருப் பதற்கான அழைப்பு எபேசி.1:4 போன்ற நிலைகளை அடைகிறோம்.

பரிசுத்தம் என்பது தேவனுக் குரிய சாயல். அவர் இஸ்ரவேலின் பரிசுத்தர். பரலோகத்தில் பரிசுத்தர், பரிசுத்தர் என்று போற்றப்படுகிறவர். அது கிறிஸ்துவின் சாயல். அவர் பரிசுத் தரும், குற்றமற்றவரும், மாசில்லாத வரும், பாவிகளுக்கு விலகினவரும் என்று எபி.7:26 குறிப்பிடுகிறது. அது தீமை யிலிருந்தும் தீய உலகிலிருந்தும் பிரிக்கப் பட்ட நிலை. மட்டுமல்ல தேவனுக்காக வும் அவரது சேவைக்காகவும் பிரித்து எடுக்கப்பட்ட நிலை.

இந்த பரிசுத்தம் அல்லது நமது அர்ப்பணம் நமது அனைத்துப் பகுதி களிலும் பரவி, நம்மை முற்றிலுமாக நிரப்பி, நமது வாழ்வில் பரந்து, நாம் செய்கிற யாவற்றிலும் வெளிப்படுகிறது. அதாவது நான் செய்கிற, நினைக்கிற பேசுகிற, திட்டமிடுகிற, சிறிய பெரிய காரியங்கள், வெளிப்படையான உள் ளான, நேர் மறையான, எதிர்மறையான, அன்பிலான அல்லது வெறுப்பிலான துக்கத்தில் அல்லது மகிழ்ச்சியின் உறவில், அமைதியில், பேசுவதில், எழுதுவதில் போன்ற எல்லா செயல்பாடுகளிலும் ஆவி, ஆத்துமா, சரீரம் ஆகியவற்றின் இயக்கத்தில் இது வெளிப்படுகிறது. வீட்டிலும், ஆலயத்திலும், அறைவீட்டி லும், கடைத் தெருவிலும், அங்காடியி லும், அலுவலகத்திலும் ரஸ்தாவிலும் நமது வாழ்வு அர்ப்பணிக்கப்பட்ட தென்று விளங்கச் செய்ய வேண்டும்.

தேவன் நமக்கு அளிக்கும் செய்தி: 'நீங்கள் பாவஞ்செய்யாமல் நீதிக்கேற்ப விழித்துக் கொண்டிருங்கள்' 1 கொரி.15:34 என்பதாகும். 'நான் பரிசுத்தர் ஆகையால் நீங்களும் பரிசுத் தராயிருங்கள்' 1 பேது.1:16. "உங்கள் சரீரங்களைப் பரிசுத்தமும் தேவனுக்குப் பிரியமான ஜீவபலியாக ஒப்புக்கொடுக்க வேண்டும்" ரோமர்.12:1. 'புதிதாய் பிசைந்த மாவா யிருக்கும்படி பழைய புளித்தமாவைப் புறம்பே கழித்துப் போடுங்கள்' 1 கொரி.5:7. "கிறிஸ்துவின் நாமத்தைச் சொல்லுகிற எவனும் அநியாயத்தை விட்டு விலகக்கடவன்" 2 தீமோ.2:19. "நாம் அவபக்தியையும் லௌகீக இச்சைகளையும் வெறுத்து, தெளிந்த புத்தியும், தேவ பக்தியும் உள்ளவர்களாய் இவ் வுலகத்திலே ஜீவனம் பண்ணி" தீத்து.2:12. "நீங்கள் கறையற்றவர்களும் பிழையற்றவர்களு மாயிருந்து, சமாதானத்தோடே அவர் சந்நிதியில் காணப்படும்படி ஜாக் கிரதையாயிருங்கள்" 2 பேது.3:14. "கிறிஸ்துவின் சுவிசேஷத்துக்குப் பாத்திரராக மாத்திரம் நடந்து கொள்ளுங்கள்" பிலி.1:27. "துர் இச்சைக்கு இடமாக உடலைப் பேணாமலிருந்து, கர்த்தராகிய இயேசுக் கிறிஸ்துவைத் தரித்துக் கொள்ளுங்கள்" ரோமர் 13:14. "ஆத்துமாவுக்கு விரோதமாகப் போர் செய்கிற மாம்ச இச்சைகளை விட்டு விலகி ....." 1 பேது.2:11.

பாவத்தைவிட்டு எவ்விதத்திலும் விலகும்படியாக தேவன் நம்மை அழைக் கிறார். அசுத்தம், அநீதி, கீழ்ப்படியாமை, மாம்ச அசுசிகள் ஆவிக்குரிய குறை பாடுகள் போன்ற அனைத்தையும் விட்டு தேவனிடம் திரும்புவோம்.

தூய ஆவியானவர் அளிக்கப்படுதல்

நம்மில் காணப்படும் உண்மை யற்ற மார்க்க நெறி சுவிசேஷத்தின் தெளிவற்ற நிலையினாலோ, வசனத்தின் குறைபாட்டினாலோ, தெய்வீக சுயா தீனத்தின் தாழ்ச்சியினாலோ, தேவனிட முள்ள நிறைவின் குறைவினாலோ ஏற் படுவதில்லை. நாம் அவரைப் போலாகும் படி அனைத்து ஆதாரங் களையும் நமக்கு அவர் அளித்திருப்பதால் நாம் அவரது சாயலைப் பெறும்படி நம்மை அழைக் கிறார். இந்த நிலை மிகவும் உயர்வானது. எனவே அது தாழ்ந்த நிலைக்கு வர அனுமதிக்க கூடாது. இதற்கான மாதிரி தெய்வீகமானது. ஆனால் அதற்குரிய பெலன் நமக்குக் கொடுக்கப்படுகிறது. ஆனால் தொடர்ந்து பரிசுத்தமாக வாழ

(5-ம் பக்கம் பார்க்க)

(4-ம் பக்க தொடர்ச்சி)

நமது பொறுப்பு மிக அதிகம். தேவை களை அவர் சந்திப்பார்.

தேவத்துவத்தின் பரிபூரண மெல்லாம் கிறிஸ்துவில் அடங்கியுள்ளன. அவர் நமக்குப் பரிசுத்த ஆவியானவரைத் தந்தருளியிருக்கிறார். அது நமக்கு இலவச மானது. மட்டுமின்றி தாராளமாகவும் அளிக்கப்படுகிறது. "கிறிஸ்துவின் ஈவின் அளவுக்குத்தக்கதாக நம்மில் அவன வனுக்குக் கிருபை அளிக்கப்பட்டிருக் கிறது" எபேசி.4:7. ஆதித் திருச்சபையில் சீஷர்கள் சந்தோஷத்தினாலும் பரிசுத்த ஆவியினாலும் நிரப்பப்பட்டார்கள் அப்.13:52. நாமும் ஆவியினால் நிரப்பப் பட வேண்டும் எபே.5:18. மேலும் நமக்கு அருளப்பட்ட பரிசுத்த ஆவியினால் தேவஅன்பு நம்முடைய இருதயங்களில் ஊற்றப்பட்டிருக்கிறது ரோ.5:5.

அவர் நம்மேல் இறங்கி வருகிறார் அப்.8:16; 11:15 பொழிந்தருளப்படுகிறார் அப்.2:33. ஊற்றப்படுகிறார் எசேக்.39:29; அப்.10:45. நம்மை ஞானஸ்நானப் படுத்துகிறார் அப்.11:16.

ஆவியானவர் நமது சுதந்தரத்தின் அச்சாரமாயிருக்கிறார் எபேசி.1:14. அவர் நம்மை முத்திரை போட்டிருக்கிறார் 1:13. அவரது தெய்வீக சாயல் நம்மேல் அச்சடிக்கப்பட்டுள்ளது. அவர் நமக்குப் போதனை தருகிறார் 1 கொரி.2:13. அவர் முன்னதாகவே ஆயத்தம் பண்ணியிருக் கிறார் எபேசி.1:10. அவர் கண்டித்து உணர்த்துகிறவர் யோவா.16:8. நம்மை வல்லமைப்படுத்துகிறவர் எபே.3:16. கனிகொடுக்கிறவர்களாக மாற்றுகிறார் கலா.5:22. அவர் போராடுகிறவர் ஆதி.6:3. அவர் ஆராய்ந்தறிகிறவர் 1 கொரி.2:10. கழுகிப் பரிசுத்தமாக்குகிறவர் 1கொரி.6:11. அவர் நம்மை நடத்துகிறவர் ரோமர் 8:14. அவர் பேசுகிறவர் 1 தீமோ.4:1, வெளி.2:7. அறிவை நமக்கு உணர்த்துகிறவர் நெகே.9:20. நமக்காக வேண்டுதல் செய்கிறார் ரோமர் 8:26. பாஷை வரம் அருளுகிறவர் அப்.2:4. அவர் உருவாக்கு கிறவர் சங்.104:30. ஆறுதல் தருகிறவர் யோவா.14:26. நம்முடைய இருதயங் களில் ஆவியை ஊற்றுகிறவர் ரோமர் 5:5. நம்மைப் புதிதாக்குகிறவர் தீத்து.3:5.

அவர் தூய்மையின் ஆவியானவர் ரோமர் 1:4. ஞானத்தையும் உணர்வை யும் அருளும் ஆவியானவர் ஏசா.11:2, எபேசி.1:17. கிருபையின் ஆவியானவர் எபி.10:28. மகிமையின் ஆவியானவர் 1 பேது.4:14. நமது தேவனுடைய ஆவி யானவர் 1 கொரி.6:11. ஜீவனுள்ள தேவனின் ஆவியானவர் 2 கொரி.3:3. நல்ல ஆவியானவர் நெகே.9:20. கிறிஸ்துவின் ஆவி 1 பேதுரு 1:11. புத்திர சுவிகாரத்தின் ஆவி ரோமர் 8:10. ஜீவ ஆவி.11:11. தமது குமாரனுடைய ஆவியுமாயிருக்கிறார்.

அத்தகைய பரிசுத்த ஆவியி னாலே நாம் பரிசுத்தமாக்கப்பட்டிருக் கிறோம் 2 தெச.2:13. நித்திய ஆவியி னாலே கிறிஸ்து தம்மை பலியாக ஒப்புக் கொடுத்தார் எபி.9:14. மீட்கப்படும் நாளுக்கென்று முத்திரையாகத் தந்த ஆவி யானவர் எபேசி.4:30. நம்மை தேவனுடைய வாசஸ்தலமாக கூட்டிக் கட்டுகிறவர் எபேசி.2:22. நமக்குள்ளே வாசம் பண்ணு கிறவர் 2 தீமோ.1:14. பரிசுத்த ஆவியின் பலத்தினாலே நம்பிக்கையைப் பெருகச் செய்கிறவர் ரோமர் 15:13.

இந்த பரலோக ஆவியானவரைப் பெற்றுக்கொள்வதின் மூலம் நமது வாழ்வு தூய்மையடைகிறது. நாம் அவரைத் தடுக்காமலும், துக்கப்படுத்தாமலும் அணைத்துப் போடாமலும் இருப்போம். மாறாக அவரை விசேஷித்த விருந்தாளி யாக அன்புடன் வரவேற்போம். அவருடைய அன்பில் மகிழ்ந்திருப் போம் ரோமர்.15:30 அப்பொழுது நமது வாழ்வு ஆவியில் வாழும் வாழ்வாக அமையும் 5:16. அப்போது நாம் ஆவியில் ஜெபிக்க முடியும் யூதா வச.20. நம்மில் கிறிஸ்து செயல்படுவதையும், நமக்காகக் கிறிஸ்து வைத்திருக்கும் பணியையும் பிரித்தறிய முடியும். யாவரோடும் சமா தானமாயிருக்கவும், பரிசுத்தமுள்ளவர் களாயிருக்கவும் நாடுவோம் எபி.12:14. நமது இருதயம் ஆவியில் ஐக்கியமுடைய தாகவும் பிலி.2:1 பரிசுத்த ஆவியின் ஐக்கியத்தில் மகிழ்வதாகவுமிருக்கும்.

நமக்குள் கிறிஸ்துவும் அவரது ஆவியும்

ஒரு புறமாக கிறிஸ்து நமக் குள்ளும் கொலோ.1:27. மறுபுறமாக நாம் கிறிஸ்துவுக்குள்ளும் 2 கொரி.5:7 வாழுகி றோம். தூய ஆவியானவர் நம்மில் வாழ்வது ஒருபுறமிருக்க ரோமர் 8:9 மறுபுறமாக நாம் அவரில் வாழ்கிறோம் கலா.5:25. இதைக் குறித்து 1 யோ.4:15-ல் "இயேசுவானவர் தேவனுடைய குமார னென்று அறிக்கை பண்ணுகிறவன் எவனோ அவனில் தேவன் நிலைத் திருக்கிறார் என்றும் அவனில் தேவன் நிலைத்திருக்கிறார்" என்றும் எழுதப் பட்டுள்ளது.

தேவ குமாரனுடைய அரு காமை, அந்த உறவு, அதன் உறுதி, முழுமை இவற்றால் ஏற்படும் ஒருமை எல்லாம் தெய்வீக சாட்சியாகும். ஆக நாம் இத்தகைய தூய வாழ்வைப் பெறவும் அதற்குரிய பெலனையும் பெற வேண்டுமே. "நீங்கள் எப்படிப்பட்ட பரிசுத்த நடக்கையும் தேவபக்தியும் உடையவர்களாயிருக்க வேண்டும்!" 2 பேதுரு 3:11.

இன்னும் எப்படியெல்லாம் இருக்கிறோம்

ராஜரீக ஆசாரியக் கூட்டமாக வும், பரிசுத்த ஜாதியாயும், அவருக்கு சொந்த ஜனமாயும் இருக்கிறீர்கள் 1 பேதுரு 2:9. நற்கிரியைகளைச் செய்ய பக்திவைராக்கியமுடையவர்கள் தீத்து.2:14. மகிமையையும் கனத்தையும் அழியாமை யையும் நித்திய ஜீவனோடு தருவார் ரோமர் 2:7.

நமது குடும்பத்திற்கோ, தேசத்திற்கோ திருச்சபைக் கோ தேவன் எதையோ செய்யும்படி அவரைத் தேடுகிறோம். அவருடைய கரத்தைத் தேடுகிறோ மேயன்றி அவரது முகத்தைத் தேடுவதில்லை.

தேவன் வெளிப்படும்போது எழுப்புதல் நிகழும்

Revival happens when God appears

Adrian Rogers (1931-2005)

நமது வீடுகளில் எழுப்புதல் தேவை. நமது சபைகளிலும், தேசங் களிலும், உலகத்திலும் கூட எழுப்புதல் தேவை. எந்த ராணுவ பலமும் பொருளா தார முன்னேற்றமும், எத்தனை தேர்தலும் தேசத்தில் எழுப்புதலைக் கொண்டுவர முடியாது. அது சர்வவல்ல தேவனுடைய மகத்துவமான செயல்.

ஏசாயா 64-ம் அதிகாரத்தில் தேவ ஜனம் சிறைபிடிக்கப்பட்டதைப் படிக் கிறோம். தேவனுடைய செயல் நடை பெறுமா என்ற கேள்வியுடன் மக்கள் வாழுகிறார்கள். அவர்களது உற்சாகம் குன்றிவிட்டது. இந்த நாட்களிலும் மக்கள் அப்படிக் காணப்படவில்லையா?

சபையானது உலகம், மாம்சம், பிசாசு ஆகியவற்றால் சிறைபிடிக்கப் பட்டுள்ளது. கிறிஸ்தவர்கள் தைரிய மிழந்து காணப்படுகின்றனர். அவர்கள் எழுப்புதலின் நம்பிக்கையை இழந்து விட்டனர். ஆனால் எழுப்புதல் நிச்சய மானதும் தவிர்க்க முடியாததுமாகும். அதற்கு தேவஜனம் தேவனோடு ஒப்புர வாக வேண்டும்.

ஏன் இன்னும் எழுப்புதல் ஏற்படவில்லை?

சபைகளில் சுயாதீனம் அதிகரித்து விட்டது. மேலும் தேவ ஜனத்தின் மத்தி யில் ஒற்றுமையில்லை. நாம் உலகத்தோடு ஒத்துப்போகிறோம். இவை மாறிவிட்டா லும் எழுப்புதல் ஏற்படப் போவதில்லை. இவைகள் எழுப்புதலில்லாமையின் விளைவுகள் என்றால் மிகையல்ல.

எழுப்புதல் என்றால் என்ன? தேவன் இறங்கி வருவதுதான் எழுப்புதல்.

"தேவரீர் வானங்களைக் கிழித் திறங்கி உருக்கும் அக்கினி எரியுமாப் போலவும், அக்கினி தண்ணீரைப் பொங்கப் பண்ணுமாப் போலவும், பர்வதங்கள் உமக்கு முன்பாக உருகும் படி செய்யும்" ஏசா.64:2.

எழுப்புதல் மூலமாக சர்வ வல்ல தேவனை சந்திக்கிறோம். நமது குடும்பத் திற்கோ, தேசத்திற்கோ திருச்சபைக்கோ தேவன் எதையோ செய்யும்படி அவரைத் தேடுகிறோம். அவருடைய கரத்தைத் தேடுகிறோமேயன்றி அவரது முகத்தைத் தேடுவதில்லை. நமது இருதயம் தேவனை வாஞ்சிக்க வேண்டும். நாம் அவரிடம் 'தேவனே நீர் இறங்கிவர மாட்டீரோ?' என்று கேட்க வேண்டும். தேவன் இறங்கிவர விரும்புகிறார்.

இஸ்ரவேல் ஜனங்களை வழி நடத்த தேவன் மேகஸ்தம்பமாகவும், அக்கினிஸ்தம்பமாகவும் இறங்கினார். ஆசரிப்புக் கூடாரத்தில் தமது பரிசுத் தத்தை மகிமையால் நிரப்பினார். ஆண்டவராகிய இயேசு பரலோகத்தை விட்டிறங்கி நம்மை இரட்சிக்க இப்பூவுல

(6-ம் பக்கம் பார்க்க)

(5-ம் பக்க தொடர்ச்சி)

கில் வந்தார். பெந்தெகொஸ்தே நாளில் ஆதித் திருச்சபையில் தூய ஆவியாக இறங்கி அதனை வல்லமையால் அபிஷேகித்தார். தமது இரண்டாம் வருகையில் இயேசு மறுபடியும் இறங்கிவருவார். இவ்வாறு சபைச் சரித்திரத்தினை நாம் படிக்கும் போதும் காலாகாலங்களிலே வெவ்வேறு இடங்களில் அவர் இறங்கி வந்ததை நாம் காணமுடிகிறது. **எழுப்புதலின்றி உலகம் மாற்றமடையுமென்று எண்ண வேண்டாம்.**

பிரசன்னத்தை உருவாக்கும் எழுப்புதல்

தேவன் இறங்கி வரும்போது நடப்பவை எவை?

மலைகள் உருகும் : "பர்வதங்கள் உமக்கு முன்பாக உருகும்படி .....". பெருமையாகிய பர்வதம், நிர்விசாரமாகிய பர்வதம், மூடபக்தி போன்ற பர்வதங்கள் தேவன் செயல்பட தடையாயிருக்கின்றன. அவை உருகி ஓட வேண்டும். பெரிய தடைகள் இருப்பதாக தேவனிடம் சொல்லவேண்டாம். எதுவுமே எழுப்புதல் அக்கினியைத் தடை பண்ண முடியாது.

பாவிகள் நடுங்குவார்கள் : 'ஆ உமது நாமத்தைச் சத்துருக்களுக்குத் தெரியப் பண்ணுகிறதற்கும், ஜாதிகள் உம்முடைய சந்நிதிக்குமுன் தத்தளிப்பதற்கும் ..... பர்வதங்கள் உமக்கு முன்பாக உருகும் படி செய்யும்' வச.1, 2. தூய ஆவியானவர் பாவிகளில் பாவ உணர்வை ஏற்படுத்தும் போது அவர்கள் நடுங்குவார்கள். இரட்சிக்கப்படாதவர்கள் இரக்கத்திற்காகக் கதறி அழுவார்கள்.

நீதிமான்கள் களிகூருவார்கள் : "தேவனே உமக்குக் காத்திருக்கிறவர்களுக்கு நீர் செய்பவைகளை, நீரேயல்லாமல் உலகத்தோற்றமுதற்கொண்டு ஒருவரும் கேட்டதுமில்லை, உணர்ந்ததுமில்லை. அவைகளை கண்டதுமில்லை. மகிழ்ச்சியாய் நீதியைச் செய்கிறவர்களையும் உம்முடைய வழிகளில் உம்மை நினைக்கிறவர்களையும் சந்திக்கிறீர்" வச.4,5. தேவன் உங்களை சந்திக்க விரும்புகிறார். அதற்காக அவர் இறங்கி வருகிறார். அவர் இறங்கி வரும் போது சபை விவரிக்க முடியாத சந்தோஷத்தாலும், நிறைந்த மகிமையாலும் நிரப்பப்படும். நீதிமான்கள் ஆனந்த சந்தோஷமடைவார்கள். அதைக் காண நானும் வாஞ்சிக்கிறேன் என்று பிள்ளைகளும் ஆசைப்பட வேண்டும்.

எழுப்புதலை தடை செய்யும் பிரச்சனைகள்

நாம் நமது பாவங்களால் கறைபட்டிருக்கிறோம். நாங்கள் அனைவரும் தீட்டானவர்கள் போல் இருக்கிறோம். எங்களுடைய நீதிகளெல்லாம் அழுக்கான கந்தைபோல் இருக்கிறது. நாங்கள் அனைவரும் காய்ந்த இலைகளைப் போல உதிருகிறோம். எங்கள் அக்கிரமங்கள் எங்களைக் காற்றைப் போல அடித்துக் கொண்டு போகிறது வச.6. எங்களை நாங்களே எங்கள் சுயநீதியால் போர்த்திக் கொள்ளுகிறோம். ஆலயத்திற்கு வந்தாலும் பெருமையுடன் அங்குமிங்கும் பார்க்கிறோம். எங்களைக் கறைப்படுத்திக் குற்றப்படுத்தும் காரியங்களால் எங்களை மூடிக் கொள்கிறோம். எங்கள் நீதியெல்லாம் அழுக்கான கந்தையாயிருக்கிறது.

"இலையை போல உதிர்ந்து போகிறோம்" *வச.6.*

இலைகள் மஞ்சள் நிறமாகி பழுப்பு நிறமடையும் போது வாடி உதிர்ந்துவிடுகின்றன. மரத்திலிருக்கும் போது அவை பச்சைபசேலென்று அழகாயிருக்கும். ஆனால் உலரும் போது காற்று அவற்றை உதிர்த்துவிடுகிறது. எனவே சுயநீதியால் தங்களைப் போர்த்திக் கொள்ளுகிறவர்கள் சிறிய பிரச்சனைகளின் போதும் மறக்கடிக்கப் படுவார்கள்.

நாம் பாவத்தில் மெத்தனமாயிருக்கிறோம்

உமது நாமத்தை நோக்கிக் கூப்பிடுகிறவனும் உம்மைப் பற்றிக் கொள்ளும்படி விழித்துக் கொள்ளுகிறவனுமில்லை வச.7. தேவனைப் பற்றிக் கொள்ள விழிப்புள்ளவர்களாயிருக்கிறீர்களா? உங்கள் இருதயங்களில் எழுப்புதலின் வாஞ்சை காணப்படுகிறதா? அப்படியானால் தேவன் எழுப்புதலைத் தருவார்.

R.A. ட்டாறி என்ற பக்தன் ஆவியால் நிரப்பப்பட்ட மக்களிடம், 'ஒரு சிறுகூட்டம் மக்கள் தேவன் இறங்கி வரும்படி உத்தமமாகவும், விடாப்பிடியாகவும் அவர் இறங்கி வரும் வரை ஜெபித்தால், எந்த சபையிலும், சிற்றாலயத்திலும் ஊழியகூடுகையிலும் எழுப்புதல் ஏற்படாமலிருப்பதில்லை. அவர்கள் முதலாவது தேவனோடு நல்மனம் பொருந்த வேண்டும். இரண்டாவதாக ஒருமனதோடு ஜெபிக்க வேண்டும். மூன்றாவதாக அவர்கள் மற்றவர்களைக் கிறிஸ்துவுக்கு ஆதாயம் பண்ணும்படியாகத் தங்களை அர்ப்பணிக்க வேண்டும். இவைகளை நிறைவேற்றினால் **எழுப்புதல் நிச்சயம்**' என்கிறார். எங்கள் அக்கிரமங்களினிமித்தம் எங்களைக் கரையப் பண்ணுகிறீர் வச.7. எங்கள் பாவங்கள் எங்களை உயிரோடே விழுங்குகின்றன. தேவன் தம்முடைய முகத்தை எங்களை விட்டு திருப்பிக் கொண்டார். எனவே எங்களுக்குப் பாதுகாவலில்லை. நாம் இந்தியாவை ஆசீர்வதியும் என்று ஜெபித்தாலும் அதற்குப் பலனில்லை. தேவன் தேசத்தின் வேலியை அகற்றிப் போட்டார்.

எழுப்புதலை பெற்றுக்கொள்வது எப்படி?

தேவனுடைய முகத்தை எப்படித் தேடுவோம்? எழுப்புதலுக்கு முன்னானது ஜெபம். தேவனுடைய சர்வ வல்லமையை நினைத்து ஜெபியுங்கள்.

'கர்த்தாவே நீர் எங்களுடைய பிதா. நாங்கள் களிமண். நீர் எங்களை உருவாக்குகிறவர். நாங்கள் அனைவரும் உமது கரத்தின் கிரியைகள் வச.8. நாம் தேவனை தேவனென்று விசுவாசிக்க வேண்டும். அவரது சர்வ வல்லமையை நாம் உணர வேண்டும். அவர் நமது வாழ்வில் ஒரு பகுதியை மட்டும் விரும்புகிறவரல்ல, அல்லது ஒரு முக்கிய இடத்தை மட்டும் எதிர்பார்ப்பவரு மல்ல. அவர் நம்மை முழுவதுமாக ஆண்டுகொள்ள விரும்புகிறார். 'ஆண்டவரே, நீர் சர்வ வல்லவர். நான் உமது கரத்தில் களிமண்ணாயிருக்கிறேன். என்னை உமது சித்தத்தின்படி வனைவீராக. நீரே எனது ராஜா' என்று சொல்லுவோமாக. ஜெபியுங்கள், அதோடு தேவனுடைய இரக்கத்தை நினைவு கூருங்கள்.

"கர்த்தாவே அதிகமாய்க் கடுங்கோபங் கொள்ளாமலும் என்றைக்கும் அக்கிரமத்தை நினைத்துக் கொள்ளாமலும் இருப்பீராக. இதோ, பாரும், நாங்கள் அனைவரும் உம்முடைய ஜனங்கள்" வச.9. "ஓ தேவனே, இரக்கமாயிரும். என்றைக்கும் கோபங் கொள்ளாதிருப்பீராக. நீர் எங்களுக்கு வேண்டும். நீர் நிச்சயமாக எங்களுக்கு வேண்டும்" என்று ஜெபிப்போம்.

தேவன் இரக்கத்தைக் கட்டளையிட விரும்புகிறார். அவர் பாவத்தைத் தண்டிப்பதைவிட, அதை மன்னிக்க விரும்புகிறார். நாம் பாவத்தைவிட்டு விலகாவிட்டால் அவர் நம்மை மன்னிக்க முடியாது. நாம் மனந்திரும்ப விருப்பமில்லாதிருப்பதுதான் எல்லாப் பிரச்சனைக்கும் காரணமாயிருக்கிறது. மனந்திரும்புதலில்லாத ஜெபம் மார்க்க சடங்காகவும், பயனற்ற புகை மண்டலம் போலவுமிருக்கிறது. அதன் மூலம் தேவனுடைய இரக்கத்தைப் பெற முடியாது. ஜெபிப்பதோடு தேவனுடைய மகிமையை கனம்பண்ணுங்கள். *(வச.10, 11, 12 படிக்க)*

'தேவனே, நாங்கள் உமது மகிமையை நினைவுகூருகிறோம். உமது பரிசுத்த ஆலயத்திலிருந்து நீர் பேசினதையும் நினைவுகூருகிறோம். எங்கள் பிதாக்கள் அவைகளை எங்களுக்குக் கூறியிருக்கிறார்கள். அந்த காலம் எத்தனை மகிமையின் காலமாயிருந்தது. தேவனே, உமது மகிமையை மறுபடியும் விரும்புகிறோம். தேவனே, உமது முகத்தையும் உமது மகிமையையும் எங்களுக்குக் காண்பியும்' என்று ஏசாயா குறிப்பிடுகிறார்.

தேவன் இறங்கி வருவதே எழுப்புதல்

உங்களில் எழுப்புதல் ஏற்பட நீங்கள் விரும்பாமலிருக்கலாம். சுயநீதியால் உங்களைப் போர்த்திக் கொண்டிருக்கலாம். நீங்கள் இருக்கிற நிலையிலேயே திருப்தியுடன் இருக்கலாம். உலர்ந்து போன இலையாயிருந்தாலும் அதனை அறியாமலிருக்கலாம்.

ஆனால் நீங்கள் தேவனைத் தேடுவீர்களானால் அவர் உங்களுக்குச் செவிகொடுக்கக் காத்துக் கொண்டிருக்கிறார். தேவன் எழுப்புதலை அனுப்ப அவரைக் கட்டாயப்படுத்த வேண்டியதில்லை. அவர் எழுப்புதலை அனுப்ப அனுமதித்தால் போதும். உண்மையாகவே நீங்கள் எழுப்புதலைக் காண விரும்புகிறீர்களா?

எல்லாவற்றையும் சுத்திகரிக்கக்கூடிய ஆண்டவரது இரத்தமாகிய ஆழமான கடலுக்குள் பாவங்களைப் போட்டுவிடுங்கள்

Cast them into the deep ocean of His all cleansing blood

Henry Law (1797 - 1884)

பிதாவே, உமக்கு நாங்கள் நன்றி செலுத்துகிறோம். உமது இரக்கங்களுக்கு முடிவில்லை. நீர் நல்லவர்.

உமது நேசகுமாரனாகிய எங்கள் ஒரே இரட்சகர் எங்கள் இருதயங்களுக்கு அதிகமதிகமாக வெளிப்படுத்தப்படுவாராக. அவரது அன்பின் அகலமும், நீளமும், ஆழமும், உயரமும் அளவிட முடியாதது. எல்லாவற்றையும் கடந்து நிற்கும் இந்த அன்பை அறிந்துகொள்ள வாஞ்சிக்கிறோம்.

அவருடைய சாயலை பெற்று மகிமையின் மேல் மகிமை அடையுமட்டும் எங்களது விசுவாசக் கண்களால் சிலுவையிலறையப்பட்ட அவரை அதிக மதிகமாய் உற்றுப் பார்க்க விரும்புகிறோம்.

நாங்கள் சிலுவையினடியில் வந்து பாவத்தின் தந்திர குணத்தையும், ஏமாற்றும் தன்மையையும் கற்றுக் கொள்வோமாக. கிறிஸ்துவின் அளவில்லாத உருக்கமான இரக்கத்தையும் அவர் எங்களுக்காக அனுபவித்த பாடுகளையும் அறிந்து கொள்வோமாக. எங்கள் வாழ்வில் ஒவ்வொரு நிமிடமும் நாங்கள் செய்த பாவங்களை அவரது விலையேறப்பெற்ற சுத்திகரிக்கும் செந்நீர்கடலில் எறிந்து விடுவோமாக.

அன்பான இயேசுவே, உம்மாலே நாங்கள் பிதாவண்டை சேருகிறோம். சிலுவையிலறையப்பட்ட உம்முடைய சரீரத்தால் தேவாலயத் திரைச்சீலை கிழிக்கப்பட்டு வழி திறக்கப்பட்ட உமது கிருபைக்காக உம்மை ஆராதிக்கிறோம்.

மகாப் பிரதான ஆசாரியரே, தேவனுடைய வலது பாரிசத்தில் உட்கார்ந்து எங்களுக்காகப் பரிந்து பேசுகிறவரே, பாவத்தில் புரண்ட எங்கள் ஜெபத்தைக் கேளும். உமது விலையேறப்பெற்ற இரத்தத்தால் எங்கள் பாவங்களைக் கழுகும். உமது நற்பண்புகளால் அவற்றை நறுமணமூட்டும். அவைகளை ஏற்புடையவைகளாக மாற்றும். உமது காயப்பட்ட கரத்தை நீட்டும். எங்கள் தேவைகளில் எங்களைக் கண்ணோக்கிப் பாரும். காத்திருக்கும் எங்கள் ஆத்துமாக்களில் உமது ஆசீர் வாதங்கள் ஊற்றப்படுவதாக.

உமது வசனம் மேற்கொள்ளுவதாக. முன்னேறட்டும். அதனை எங்கள் கடின இருதயங்களைத் துண்டுதுண்டாக நொறுக்கத்தக்கதான சம்மட்டியாக மாற்றும். உமது வல்லமைக்கு மேலான தொன்றுமேயில்லை.

"இரக்கத்தின் சிங்காசனத்தைப் புயல்போல் அசைத்து தொடர்ந்து ஜெபிப்பதால் பரலோகம் கீழே இறங்கிவரும்" என்று ஜாண் வெஸ்லி கூறியிருக்கிறார்.

உமது சத்துவம் அளவில்லாதது!
உமது அன்புக்கு எல்லையில்லை!
உமது கிருபை கட்டுக்கடங்காதது!

உம்மால் செய்யக்கூடாத பெரிய காரியம் ஒன்றுமேயில்லை.

உமது வல்லமையை வெளிப்படுத்தும். அதன் மூலம் பாவிகள் மனந்திரும்பட்டும். வழிதவறியவர்கள் நேர்வழியை வந்தடையட்டும், புறம் பாக்கப்பட்டவர்கள் உள்ளே நுழையட்டும். சாத்தானுடைய கைதிகள் விடுதலையாகட்டும். குருடரின் கண்கள் திறக்கப்படட்டும். நொறுங்குண்ட இருதயங்கள் குணமாகட்டும். கவலையுள்ளவர்களின் துக்கம் சந்தோஷமாக மாறட்டும். நீதிக்காரரின் வீண்பெருமை அகலட்டும். பொய்யர்களின் வாய் அடைக்கப்படட்டும். அறிவீனர் புத்தியடையட்டும். கொள்ளிகள் அடுப்பிலிருந்து தப்பு விக்கப்படட்டும். பரிசுத்தவான்கள் பரிசுத்த வாழ்வில் கட்டியெழுப்பப்படட்டும். அவர்கள் நித்திய மகிமையின் சுதந்தரத்திற்குத் தகுதியுள்ளவர்களாக மாறட்டும்.

பெரிய காரியங்களை நாங்கள் உம்மிடத்தில் கேட்கிறோம். ஏனெனில் நீர் எங்கள் மிகப்பெரிய மகத்துவமான தேவன். இயேசுக் கிறிஸ்துவே மாறாத மீட்பரும் மத்தியஸ்தருமாயிருக்கிறபடியால் உமது சொந்தக் குமாரனும், மகிமையும் மாட்சிமையும் நிறைந்தவராகிய அவரது நாமத்தில் கேட்கிறோம். ஆமென்.

தூய ஆவியானவருக்கு முழுமையாக ஒப்புக்கொடுங்கள்

Yield fully to the Holy Spirit

Charles H.Spurgeon

"ஆகையால் தேவனுக்குக் கீழ்ப்படிந்திருங்கள்" யாக்.4:7.

நமது இருதயங்களை தெய்வீக ஆவியானவருடைய அசைவுகளுக்கு அர்ப்பணிப்பதே தேவனுக்கு நம்மை அர்ப்பணிப்பதாகும். இதன் மூலம் நாம் எளிதில் மாற்றமடையக்கூடியவர்களாகவும் மற்றவர்களில் மாற்றம் ஏற்படுத்தக் கூடியவர்களாகவும் மாறுகிறோம். அனேக கிறிஸ்தவர்களைச் சரியான பாதையில் நடத்துவது ஆவியானவருக்கு ஒரு கடின பணியாயிருக்கிறது. ஏனெனில் அவர்கள் புத்தியில்லாத குதிரையைப் போலவும் கோவேறு கழுதையைப் போலவுமிருக்கிறார்கள். அவர்களுக்குக் கடிவாளம் பயன்படுத்தப்பட வேண்டும். காட்டிலுள்ள கேதுரு மரம் உறுதியாயிருப்பதால் புயல் காற்றிலும் அசைக்கப்படுவதில்லை. ஆனால் நதியோரத்தில் வளரும் நாணல் சிறிய காற்றிலும் அசையக்கூடியது. பல காரியங்களில் நீங்கள் உறுதியாயிருந்தாலும் நாணலைப் போல தேவ ஆவியானவரின் சிறிய அசைவாடுதலுக்கும் அசைய வேண்டும். தேவனுடைய சித்தத்திற்கு நம்மை முழுமையாக ஒப்படைக்க வேண்டும்.

சில வேளைகளில் தேவ ஆவியானவர் நம்மிடம் மெல்லிய குரலில் ஜெபிக்கச் செல்லும்படி கூறுவார். அப்படிப்பட்ட வேளைகளில் உடனே ஜெப அறைக்குள் செல்ல வேண்டும். 'என் முகத்தைத் தேடுங்கள் என்று சொன்னீரே, உம்முடைய முகத்தையே தேடுவேன் கர்த்தாவே என்று என் இருதயம் உம்மிடத்தில் சொல்லிற்று' சங்.27:8.

சில வேளைகளில் தேவ ஆவியானவர் சுய ஒறுப்புடன் உங்கள் நேரத்தைச் செலவிடும் ஒரு பணியினைச் செய்யத் தூண்டலாம். அதினால் உங்களுக்கு அதிக பயன் இல்லாமலிருக்கலாம். ஆயினும் அவர் சத்தத்துக்குக் கீழ்ப்படியாமலிருக்க வேண்டாம். விரைவாக அந்தக் கடமையை நிறைவேற்றுங்கள். "உமது கற்பனைகளைக் கைக் கொள்ளும்படி நான் தாமதியாமல் தீவிரித்தேன்" சங்.119:60.

நாம் செய்கிற தவறுகளிலிருந்து ஆழமான மனந்திரும்புதலுக்காக ஆவியானவர் நம்மை அழுத்தலாம். நாம் நம்முடைய இரக்கமற்ற தன்மை, கோபம், கடினவார்த்தை, லௌகீகம் ஆகியவற்றில் விழுந்துவிட்டதற்காக நம்மைக் கடிந்துகொள்ளலாம். அப்போதெல்லாம் நாம் விழிப்புடன் நமது இருதயங்களை சோதித்து, ஆத்துமாவைச் சுத்திகரிக்க வேண்டும்.

ஒரு சிறிய சைகை தேவ ஆவியானவரிடமிருந்து கொடுக்கப்பட்டாலும் அது நம்மை நடத்தப் போதுமானதாயிருக்க வேண்டும். அவரிடமிருந்து வரும் சிறிய வார்த்தையும் மிக மெல்லிய அசைவும் நம்மை வழிநடத்தப் போதுமானவைகளாயிருக்க வேண்டும். நேரடியாகவும் உடனடியாகவும் அவரது கட்டளைக்குக் கீழ்ப்படிய வேண்டும்.

நமது செயல்பாடுகளல்ல, தேவ ஆவியானவருக்குக் கீழ்ப்படிவதே முக்கியமானது. நமது ஓட்டமல்ல, அவரிடம் இழுத்துக் கொள்ளப்பட நமது விருப்பமே இன்றியமையாதது. மார்க்க சம்பந்தமான செயல்பாடுகள் உண்டு என்பது உண்மைதான். நாம் போராட வேண்டியதும் அவசியமே. ஆயினும் தூய ஆவியானவரின் தூண்டுதலுக்கு நம்மை அர்ப்பணிப்பது மிகமிக அவசியம். ஏனெனில் விருப்பம் கொள்ளவும் கிரியை செய்யவும் காரணர் அவரே. அவர் நம்மில் வல்லமையாய்க் கிரியை செய்கிறவர். நாம் அவரது தெய்வீகப் பாதையில் தடையாயிராவிடில் அவர் தமது கிருபையால் நம்மை

(8-ம் பக்கம் பார்க்க)

(2-ம் பக்க தொடர்ச்சி)

ஆண்டவருக்குச் சித்தமானால் கீழ்காணும் சபை களில் உபவாச ஜெபம் நடைபெறும்.

ஜூலை - Bethel Fellowship Church Ranithottam, Nagercoil

ஆகஸ்ட் - Church of God in India, Thirumalapuram, Srivilliputhur

செப்டம்பர் - Jesus Care's Assembly, Anna Nager, Chennai

அக்டோபர் - Zion Prayer House, Villivakkam, Chennai

நவம்பர் - Christian Assembly, Ayanavaram, Chennai

வாசகருக்கு எனது அன்பான வேண்டுகோள்

1. இந்த உபவாச ஜெபங்களுக்காக நீங்கள் **ஒவ்வொரு ஞாயும்** ஜெபிக்கும்படி மிகவும் பட்சமாய் கேட்கிறேன். உங்களால் முடிந்தால் உபவாச ஜெபம் நடைபெறும் நாளில் காலை உணவையாவது உண்ணாமல் உபவாசத்தோடு ஜெபியுங்கள்.
2. உபவாச ஜெபம் நடைபெறும் சபையை சுற்றியுள்ள சுமார் 30 கிலோமீட்டர் தூரத்திலுள்ள வாசகர்கள் தயவாய் கலந்து கொள்ளுங்கள்.
3. மாதந்தோறும் நடைபெறும் இந்த உபவாச ஜெபங்களுக்கு உங்களுக்கு இயலுமானால் மாதந்தோறும், 6 மாதங்களுக்கு ஒருமுறை அல்லது வருடத்திற்கு ஒரு முறை உங்களால் இயன்றதை அனுப்புங்கள். உங்களில் சிலர் இவ்விதமாக தாங்குகிறீர்கள், தேவன் உங்களை ஆசீர்வதிப்பார்.

மரியாதைக்குரிய சபை ஊழியர்களுக்கு

உங்களில் சிலர் சபை ஊழியம் செய்கிறீர்கள். ஆண்டவருக்கு சித்தமானால் **2023**-ம் ஆண்டு ஒரு விசை உங்கள் **சபையை** "**எழுப்புதலுக்காக இதய கதறல்**" 7 மணி நேர உபவாச ஜெபத்திற்கு திறந்து தாருங்கள் என்று அதிக அன்பாய் கேட்டுக்கொள்கிறேன்.

மாதம்	தேதி	இடம்
ஜனவரி		
பெப்ரவரி		
மார்ச்		
ஏப்ரல்		
மே		
ஜூன்		
ஜூலை		
ஆகஸ்ட்		
செப்டம்பர்		
அக்டோபர்		
நவம்பர்		
டிசம்பர்		

"ஸ்திரீயானவள் தன் கர்ப்பத்தின் பிள்ளைக்கு இரங்காமல், தன் பாலகனை மறப்பாளோ? அவர்கள் மறந்தாலும், நான் உன்னை மறப்பதில்லை" ஏசாயா 49:15.

விபரங்களுக்கு :
அலுவலகம் : **95432 21008**
உதவி : **94897 40295**

உங்கள் சகோதரன்,
வெஸ்லி தேவதாசன்
(WESLEY DEVADASON)

வேதாகமம்

வேதாகமம் ஓர் அரும் திரவியம்!
அது தேவனின் உண்மை!
பரிசுத்த ஆவியானவரின் சத்தம்!
பத்தர்களின் கீதம்! தேனிலும் மதுரம்!

(7-ம் பக்க தொடர்ச்சி)

உயர்தலங்களுக்குச் சுமந்து சென்று நம்மை மேலும் மேலும் கிறிஸ்துவின் சாயலாக மாற்றுவார்.

தேவனுக்கு உங்களை முற்றிலுமாக அர்ப்பணியுங்கள். அவரது கரத்தில் அடங்கியிருப்பதின் இனிமையைக் கற்றுக் கொள்ளுங்கள். அவரது சித்தம் செய்வது ஆசீர்வாதமானது. அத்தகைய முழுமையான அர்ப்பணம் நீங்கள் இங்கேயே பரலோகத்தை அனுபவிக்க ஏதுவாயிருக்கும்.

எழுப்புதலுக்காக ஜெபித்திடு!
எழுப்புதலுக்காக பிரசங்கித்திடு!

விருதுநகர் மாவட்டத்தில்
எழுப்புதலுக்காக இதய கதறல்
(7 மணி நேர உபவாச ஜெபம்)

காலம் : **15-08-2022** திங்கள்கிழமை
காலை 10 மணி - மாலை 5 வரை

இடம் : **Church of God** (Full Gospel) **in India**
Thirumalapuram,Villuppanur
Srivilliputhur 626 138

செய்தி : சகோதரன் **வெஸ்லி தேவதாசன்**

ஜெபம் : **NIMS மிஷனெரிகள்,** குஜராத்
IEM மிஷனெரிகள், தமிழ்நாடு

தொடர்பு : **வருகையின் தூதன்**
மொபைல் : 95432 21008

சிந்தனைக்கு

நாம் மனந்திரும்ப விருப்பமில்லாதிருப்பதுதான் எல்லாப் பிரச்சனைக்கும் காரணமாயிருக்கிறது. மனந்திரும்புதலில்லாத ஜெபம் மார்க்க சடங்காகவும், பயனற்ற புகை மண்டலம் போலவுமிருக்கிறது. அதன் மூலம் தேவனுடைய இரக்கத்தைப் பெற முடியாது.

ஜெபியுங்கள்! பங்குபெறுங்கள்!

எழுப்புதலுக்காக இதய கதறல்

(7 மணி நேர உபவாச ஜெபம்)

இடம் : **Bethel Fellowship Church**
Rani Thoottam, Nagercoil
Cell: **94423 81852**

நாள் : **09.07.2022,** 2-வது சனிக்கிழமை

நேரம் : காலை 10.00 மணி முதல்
மாலை 05.00 மணி வரை

செய்தி : சகோதரன் **வெஸ்லி தேவதாசன்**

ஜெபம் : **NIMS மிஷனெரிகள்,** குஜராத்
IEM மிஷனெரிகள், தமிழ்நாடு

தொடர்பு : **வருகையின் தூதன்** மொபைல் : 9543221008

Contact:

VARUKAYIN THOOTHAN
7, Newport Street, W.C.C. Road,
Nagercoil - 629 001.
Kanyakumari District,
SOUTH INDIA.

Mobile: +91 095432 21008
Whatsapp: +91 094897 40295
email: varukayinthoothan@hotmail.com

சிந்தனைக்கு

முதலாவது தேவனோடு **நல்மனம்** பொருந்த வேண்டும். இரண்டாவதாக **ஒருமனதோடு** ஜெபிக்க வேண்டும். மூன்றாவதாக அவர்கள் மற்றவர்களைக் கிறிஸ்துவுக்கு **ஆதாயம்** பண்ணும்படியாகத் தங்களை அர்ப்பணிக்க வேண்டும். இவைகளை நிறைவேற்றினால் **எழுப்புதல்** நிச்சயம்

சபையானது உலகம், மாம்சம், பிசாசு ஆகியவற்றால் சிறைபிடிக்கப்பட்டுள்ளது. கிறிஸ்தவர்கள் தைரியமிழந்து காணப்படுகின்றனர். அவர்கள் எழுப்புதலின் நம்பிக்கையை இழந்து விட்டனர். ஆனால் **எழுப்புதல்** நிச்சயமானதும் தவிர்க்க முடியாததுமாகும். அதற்கு தேவஜனம் தேவனோடு ஒப்புரவாக வேண்டும்.

சபைகளில் சுயாதீனம் அதிகரித்து விட்டது. மேலும் தேவ ஜனத்தின் மத்தியில் ஒற்றுமையில்லை. நாம் உலகத்தோடு ஒத்துப்போகிறோம்.

உத்தம மனந்திரும்புதல் என்பது நாம் தவறான பாதையில் சென்று கொண்டிருக்கிறோம் என்ற விழிப்புணர்வாகும்.

Printed and Published by Wesley Devadason and Printed at Varukayin Thoothan Offset Press and Published at 3/8, Newport Street, Nagercoil - 629 001.
Editor : Wesley Devadason